# திலகவதியார்

தருமபுர ஆதீனம்




தருமபுர ஆதீன மடாலய மேல்தளம்



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக

ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 98.

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

# திலகவதியார்

இது
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உரு-வது மகாசந்நிதானம்
**ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**
ஆக்ஞைப்படி
வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்
1946

# முன்னுரை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் உ௬-வது மகாசந்நிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்** ஆற்றிவரும் சமயப்பணிகளுள் பத்தித்தனித் தெப்பமாகிய தேவாரத் திருமுறைகளிற் **காணும்** தலப்பதிகங்களைத் தனித்தனியே சிறு சிறு புத்தகமாக அச்சிட்டு வழங்குதலும், திருவருள் விளக்கம்பெற்ற பெரியோர்களது வரலாற்றினை எளிய உரைநடையில் எழுதச்செய்து அச்சிட்டு வழங்குதலும் ஒன்றாகும். அதன்படி எழுந்ததே இந்நூல். இது தூத்துக்குடி திலகவதியார் சங்கத்தில் பார்த்திப ஆண்டு மாசித் திங்கள் அ-ம் நாள் நடைபெறும் ஆண்டு விழாவில் ஆதீன வெளியீடாக அன்பர்கட்கு வழங்கப் பெறுகிறது.

உ

குருபாதம்

# திலகவதியார்

## தோற்றுவாய்

இறைவன் ஒருவன்; அவனே ஆதியும அந்தமும் இல்லாதவன்; அன்பர்கட்கு ஆரா இன்பம் அருளுபவன்; பிறவிவேரறுக்கும் பெம்மான்; இருசுடர் தீ ஆகாசமாவான் அவனே, புவிபுனல்காற்று ஆவான் அவனே. ஞானமயனாகி நின்றானும் அவனே. அவன் உருவமோ செந்நிறத்தது; நிரம்ப அழகியது; வெண்ணீறு சண்ணித்தது; உமையவளை ஒரு பாகத்திலுடையது; மற்றும் பிறையும் புனலும் அரவும் கொன்றையும் வெண்டலை மாலையும் அணிந்த சென்னியுடையான். புலித்தோலுடையான். யானைத்தோல் போர்த்தியவன். இடபக்கொடியும் இடபவாகனமும்

உடையான். மழுவும் மானும் அனலும் ஏந்திய திருக்கரமுடையான். இத்தகையோன் சிவன்எனும் நாமம்பெற்று விளங்குகின்றான். இவனைத் தலைவனாகக்கொண்டு வழிபடும் சமயம் **சைவசமயம்.**

சைவ சமயத்திலே தோன்றும்படியான பாக்கியம்பெற்ற சைவ சமயிகள் ஒவ்வொருவரும் முக்கியமாகத் தரித்துக்கொள்ள வேண்டியன திருநீறும், உருத்திராக்கமும் ஆகும். இவ்விரண்டின் சிறப்புக்களைப்பற்றி வேதங்களும், உபநிடதங்களும் மிக விரிவாகக் கூறுகின்றன. வேற்றுச் சமயச்சார்பினாலோ? அல்லது திருவருள் விளக்கம் உலகில் விரிந்து பரவவேண்டும் என்ற இறைவன் சங்கற்பத்தினாலோ பூதியும் சாதனமும் போற்றுவாரில்லாது ஒருகாலத்தில் குன்றத் தலைப்பட்டது; நன்னெறிமாறி நவைநெறி நடந்தது; அவம்பெருக்கும் அமண்சமயப் பெரும்பிணி உலகில் பரவியது. அக்காலத்தில்

அப் பிணியை நீக்கவும் சைவ நன்னெறியினை மீண்டும் தழைத்தோங்கச் செய்யவும் இறைவன் திருவருளால் உலகில் திருவவதாரஞ் செய்தருளியவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலாகிய பரமாசாரியசுவாமிகள். இவர்கள்வரலாற்றினை அறிவிப்பது திருத்தொண்டர் புராணமென்னும் பெரியபுராணம்.

## பெரியபுராணமும் அம்மையார்களும்

பெரியபுராணத்தில் சைவத்தை வளர்த்த பல அம்மையார் வரலாறுகள் தனித்தும் நாயன்மார்களோடு சேர்த்தும் கூறப்படுகின்றன. அவர்களுள் தத்தம் நாயகர்கள் ஆணை வழி நின்று ஒழுகினோர் சிலர்; அத்துடன் அடியவர்களுக்கு அறுசுவை உணவினை அன்புடன் அருத்தி வழிபட்டோர் சிலர்; செயற்கரும் செயல்கள் செய்த தீரர்களாகிய திருஞானசம்பந்தர் முதலாகிய பரமாசாரிய மூர்த்திகளைப் புதல்வர்களாகப்பெற்றெடுத்து

வளர்க்கும் பாக்கியம் பெற்றோர்கள் சிலர்; பரமாசாரிய மூர்த்திகள் முதலாயினோர்களை நாயகர்களாகப் பெற்று விளக்கமுற்றோர்களும் சிலர்; நாயகன் பிறதுறையிற் சென்றாலும் தாம் அவ்வழிசாராது சைவசமயத்திலே நிலைத்துநின்று திருவருட்டுணையால் நாயகனை மீட்டும் தன் சமயத்திற்குத் திருப்பியதோடு, பரமாசாரிய மூர்த்திகளால் தேவாரத்திலே வைத்துத் திருவாய் மலர்ந்தருளும்படியான பேற்றினையும்பெற்ற அம்மையாரும் உளர்; நாயகன் தம்மைவிட்டகன்ற காலத்து அவன் பொருட்டுத் தாங்கியிருந்த உடலிலே பொருந்திய தசைத்திரளை உதறி யாவரும் வெறுக்கும் பேய்வடிவம்பெற்றுத் தலையாலேநடந்து, சென்று இறைவனை வணங்கி அவரது திருவடிகளுக்குப் பல பாமாலைகளைச் சூட்டியதோடு, அப் பெருமானது திருவாக்கினால் அம்மையே! என்றழைக்கப்பெற்ற சிறப்பினையுடைய வணிகமங்கையரும் உளர்; செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருந்து

வானத்தவர்க்கு நல்விருந்தான மங்கையரும் உளர்; ஈந்து உவக்கும் இன்பம்பெறுவதே நன்று என்று கருதித் தன்குடிக்கு ஓரே மகனுன நல்ல குலமகனை—இளம் பாலகனை அச்சம் சிறிதும் இன்றிப் புதல்வனது கிண் கிணிக்கால்கள் இரண்டையும் தன் மடியின் மீது வைத்து, தன்கையினுல் அவனது கை களைப் பிடித்துக்கொள்ள, தந்தை தலையைப் பிடித்து அரிந்து கொடுக்க வாங்கிக் கறியமு தாக்கி, அடியவர்க்குப் படைத்து அவரது இன்முகத்தைக் கண்டு மகிழ்ந்து 'பவக்கடல் தொலையக் கடந்துளோர்களும் கடப்பரோ மக்கண்மேற் காதல்' என்ற உரையினைப் பொய்யாக்கிய மங்கையரும் உளர்; இளமை மீதூர இன்புத்துறையில் எளியரான மங்கை யரும் உளர்.)

'இன்று உன்னை இவ்வடியவர்க்குக் கொடு த்து விட்டேன்; இவருக்கு நீ மனைவியாகுக' என்றுரைத்த தந் நாயகனது ஆக்ஞையைச்

சிரமேற்கொண்டு அதன்வழி சென்ற அ
மையார் வரலாறும் அதிற் காணப்படுகிறது
மேலும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் விண்ண
பத்திற்கு இணங்கிய பெருமான் சங்கிலிய
ரது கனவிலே தோன்றி "சாருந்தவத்து
சங்கிலி! கேள்;.........நீ அவனை மணத்தா
அணைவாய் மகிழ்ந்து" என்றருளிச்செய்தா
என்ற வரலாறும், பரவையார் புலவியைநீக்
வேண்டி நள்ளிரவில் இறைவன் ஏனமா
மாயோன்வேலை இருநிலம் கீண்டும் காணு
தேனவிழ்கமலமன்ன சேவடி நிலம் தோ
மாறு அவரது திருமாளிகைக்குச் சென்று
'பாவாய்! திறவாய்' என்று அழைத்து
துயிலெழுப்பி 'நங்கை நீ மறுது செய்யி
நான் வந்தகாரணத்தைக் கூறுவேன்' என்
முன்னதாகவே உடன்பாடுபெற்று வந்ததை
கூறியதோடு, அதனுல் பரவையாருக்கு உ
டான சினத்திற்கும் உள்ளாகி வந்து, மீ
டும் ஒருமுறை சென்று 'முன்புபோல் மறு
காதே; சுந்தரன் பிரிவுத் துன்பத்தை நீக்

வேண்டும்' என்று எளிமையுடன் மொழிந்து புலவியை நீக்கினூர் என்ற வரலாறும் படிப்போர்க்கு அக்காலத்திலுள்ள பெண் மக்களது சமயப்பற்றினையும், பெருமான் அம்மகளிர்கட்கு எளிவந்து காட்சி வழங்கிய தன்மையினையும் அறிவிக்கின்றன.

இன்னும் அப்புராணத்திலே பேசப்பெறும் மற்றொரு மங்கைமார் இறையருளால் ஏற்பட்ட வறுமைக்காலத்தும் மனந்தளராது மங்கலநாணிலே கோத்துக் கழுத்திலே அணிந்துள்ள தாலியைக் கழற்றிக் கணவர் கையில் கொடுத்து 'இதனை விற்று நெல் வாங்கி வாரும்' என்று கூறியதும், பின்னர் அளவற்ற செல்வங்களைப் பெற்றகாலத்துக் கணவனிடத்தில் 'இந்த விளைவெலாம் அல்லொத்தகண்டன் எம்மான் அருள்தரவந்தது' என்று தன் முனைப்பற்றுக் கூறியதும் அறிந்து இன்புறற்பாலன.

இவ்வாறு ஒல்லும் வகையான் பல்லாற்றானும் சமயப்பணி புரிந்துவந்த சிறப்பினு

லன்றே சேக்கிழார் சுவாமிகள் மங்கையர்க் கரசியாரைப்பற்றிக்கூறுங்கால் 'மங்கையர்க் குத் தனியரசி; எங்கள் தெய்வம்; தெய்வப் பாவை; என்றும், அவ்வரசியை வணங்குவார் களாகிய அடியார்களது திருவடிகளை யாம் வணங்குவாம்' என்றும் கூறுவாராயினர். 'திருவினும் பெரியாள்' 'நற்றவக்கொடிய னார்' 'பெருங்கற்பின் அணங்கு' 'கற்புவளர் கொடியே அனைய மனைவி' 'அழகின் கொழுந்து' என்றெல்லாம் ஏனைய மங்கைமார்களை யும் ஆங்காங்கு குறித்துச் செல்வது அறிந்து இன்புறற்பாலது.

## திலகவதியார் திருவவதாரம்

சமயசாரியர்கள் நால்வர்களுள் திருநாவுக் கரசு சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமி களும் திருவவதாரஞ் செய்தருளிய சிறப் பினைக்கொண்டது திருமுனைப்பாடிநாடு. அத னிடத்தே விளங்குவது திருவாமூர் என்னும்

திருத்தலம். அத்தலத்திலே அவதரித்தவர் திலகவதியார்; குலம்வேளாளர்குலம். தந்தையார் திருப்பெயர் புகழனர். தாயார் திருப்பெயர் மாதினியார். இவர்கள் இருவர்களும் இல்லறவொழுக்கத்திலே தலைசிறந்து விளங்கி வரும் நாளையில் மாதினியார் மணிவயிற்றினிடமாக, தாமரைமலரில் விளங்கும் திருமகள் என்ன ஓர்பெண்மகவு அவதரித்தது. பின்னர்ச் சில ஆண்டுகள் கழித்து அளவற்ற கலைத்துறைகள் தழைக்கவும், அருந்தவத்தோர் நெறிவாழவும், உலகைவிருள் ஒழிக்கும் சூரியன்போல ஒரு ஆண்மகவும் அவதரித்தது. தாய்தந்தையர்கள் தம்பொருளாகிய தம மக்களது அழகினையும் பேரறிவினையும் கண்டு களித்து 'நாம் செய்த தவத்தின் பயனே இவவிருவுருவாக வந்தவதரித்தது' என்று எண்ணியவர்களாய், பெண்மகவுக்குத் திலகவதியார் என்றும், ஆண்மகவுக்கு மருணீக்கியார் என்றும் திருநாமம் இட்டு வளர்த்தார்கள்.

# திருமணம் பேசுதல்

புகழனார் குலத்திற்கு ஒத்தகுலத்தில் தோன்றியவர்; இறைவனது அடிமைத் திறத்தில் வழுவாதவர்; அரசனிடத்தில் பற்றுள்ளவர்; வீரத்தில் ஆண்சிங்கம் போன்றவர்; கண்டார் விரும்பும் கட்டழகுடையவர்; இத்தகைய சிறப்புள்ள கலிப்பகையார் என்னும் பெயருடையார் திலகவதியாரை மணஞ்செய்துகொள்ளும் வேட்கை யுடையவராய் மேலோரை அனுப்பினார். அவர்களும் வந்து தமது கருத்தை அறிவித்துப் புகழனாரது உடன்பாட்டைப் பெற்றுச்சென்றார்கள். திருமணத்திற்குமுன் செய்யவேண்டிய சடங்குகளை எல்லாம் செய்யத்தொடங்கினார்கள். அவைகள் முடிவதற்குமுன் கலிப்பகையார் அரசன் ஆக்ஞைப்படி, பகைமை கொண்டு வந்த வடநாட்டரசர்களோடு போர்புரியப் புறப்பட்டுச்சென்றார். படைகளும் உடன் சென்றன. பலநாட்கள் யுத்தம் நடந்தன.

## தாய் தந்தையர்களை நீத்தல்

திருவாமூரில் புகழனார் வினைப்பயனால் உண்டான பிணியினால் பீடிக்கப்பட்டு உலக வாழ்வினை நீத்தனர். கற்புநெறிவழுவாத மாதினியார் சுற்றத்தார் மக்கள் ஆகியோர் களைத் துகளாகவே கருதித் தாமும் கணவனுடன் போயினர். இவ்வாறு தந்தையாரும் தாயாரும் இறக்கவே திலகவதியாரும் மருணீக்கியாரும் சுற்றத்தார்களோடு ஆற்றொணாத் துன்பத்தில் மூழ்கினார்கள். எவ்வாறாயினும் பயன் யாது? மாண்டவர்கள் மீண்டுவருவார்களோ? ஆகவே ஒருவாறு துயர்நீங்கித் தாய் தந்தையர்களுக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களைச் செய்து முடித்தனர்.

## உயிர்விடத்துணிதலும் துணிவினை நீத்தலும்

போர்மேற் சென்ற கலிப்பகையாரோ போர்க்களத்தில் உயிர்கொடுத்துப் புகழ்பெற்றார் என்ற செய்தி எங்கும் பரவியதோடு

திலகவதியாரது செவியிலும் சென்றது. செல்லவே அம்மையார் 'முன்னரே எனது தாய் தந்தையர்கள் என்னை அவருக்குத் திருமணஞ்செய்யக் கருதிவிட்டபடியால் நான் அவருக்கே உரியவள். ஆதலின் இவ்வுயிரைத் தாங்கி நிற்றல் கூடாது. இப்பொழுதே அவருயிரோடு சேர்ப்பிக்கவேண்டும்' என்ற துணிவு கொண்டார்.

இதனைக்கண்ட மருணீக்கியார் 'தந்தையார் போயினர்; தாயரும் போயினர்; ஆயினும் தேவரீர் அடியேனைப் பாதுகாத்து வருவதாலல்லவோ உயிர்தரித்திருக்கின்றேன். அப்படி இருக்க, தாங்கள் இப்பொழுது இவ்வாறு துணிவுகொள்வீரேயானால் உமக்கு முன் யான் உயிர்நீப்பேன்' என்று அலறி அடிமிசைவீழ, அம்மையார் தமதுதம்பியார் உயிருடன் விளங்கவேண்டும் என்ற கருணையினால் தாம்கொண்ட துணிவினைக் கைவிட்டார்; ஆபரணங்களையும் அகற்றினார்;

எவ்வுயிர்களையும் ஒன்றாகக்கருதும் அருளைத் தாங்கினார். மனைத்தவத்தைமேற்கொண்டார். மருணீக்கியாரோ உலக நிலையாமையினை உணர்ந்து பல அறங்களைச் செய்து பின்னர் சமண்சமயத்தில் புகுந்து தருமசேனர் என்னும் பட்டம் பெற்று விளங்கினார்.

## திருத்தொண்டு செய்தல்

திலகவதியார் சுற்றத்தொடர்பொழித்துத் தூயசிவநன்னெறியைச் சேர்வதற்காக இறைவன் திருவடிகளைச்சார எண்ணினார். திருவதிகை வீரட்டானஞ்சேர்ந்தார். வீரட்டானப் பெருமானை வணங்கித் திருநீறும் கண்டிகையும் தரித்து மிக்க அன்புடன் தமது கைகளினாலேயே திருப்பணிகள் செய்யத் தொடங்கினார். என்ன செய்தார்? திருப்பள்ளி எழுச்சிக் காலத்திலே இறைவனது திருமுன்னர் திருவலகிடுதல்; பசுவின் சாணத்தினால் திருமெழுகிடுதல்; நந்தவனம்சென்று வண்டுகள் தேனுண்டற்கு முன்னமே மலர்களைப்பறித்து வந்து மாலைதொடுத்தல் முதலியனவாம்.

## இறைவன் அருள்பாலித்தல்

இவ்வாறு சரியைத்தொண்டு செய்துவரும் இவ்வம்மையார் தன் தம்பி அமண சமயப்படு குழியில் வீழ்ந்து கிடக்கின்றனனே; எவ்வாறு ஈடேறுவான் என்று மனம்வாடி இறைவனை வணங்கும்போதெல்லாம் 'பெருமானே அடியேனைத் தேவரீர் ஆண்டருள்வீராகில் அடியேன்பின் பிறந்தவனையும் பரசமயக் குழியினின்றும் எடுத்தாளவேண்டும்' என்று விண்ணப்பஞ் செய்து வருவாராயினர். இதனைத் திருவுளம்பற்றிய பெருமானும் ஒருநாள் கனவில் எழுந்தருளி 'உன் மனக் கவலையை ஒழி; உன்னுடன் பிறந்தான் முன்னமே ஓர் முனிவராக இருந்து எம்மை அடையவேண்டித் தவஞ்செய்தனன். ஆதலின் அவனைச் சூலைநோய்தந்து ஆட்கொள்வோம்' என்று அருள்பாலித்து மருணீக்கியாருக்கும் சூலைநோயருளினர். நோயோ மிகக்கொடுமையானது. வயிற்றினுட்புக்கதும் குடரினுள் குடையத்தொடங்கிற்று. வலி

தாங்கமுடியவில்லை, என்செய்வார்? சமணர்கள் நீரை மந்திரித்துக் குடிக்கச்செய்தனர். பீலிகொடு தடவினர். ஆயினும் நோய் மேலும்மேலும் அதிகரித்தது. யாவரும் கைவிட்டனர். மயக்கமுற்ற மருணீக்கியாரும் பழைய உறவாகிய தமக்கையாரை எண்ணினர். உணவு அளிப்பவன் மூலம் செய்தி அனுப்பினர். அவனும் திருவதிகைசென்று அம்மையாரை வணங்கி 'யான் உமது தம்பியின் ஆக்ஞைப்படி வந்தேன்' என்று கூற, அவரும் 'தீங்குளவோ?' என்றனர். அதற்கு அவன் 'சூலைநோய் கொல்லாமல் வாட்டுகின்றது; ஒருவராலும் தீர்க்க முடியவில்லை; யாவரும் கைவிட்டனர்; தமக்கையாரிடம் சென்று பிழைக்கும் வழிகேட்டு பிறரறியா வகை வருவாய் என்ருர்' என்பதாகச் சொன்னான். அதனைக்கேட்ட அம்மையார் 'யான் தீயோர்வாழும் இடத்தை அணுகேன் என்று கூறு' எனப்பணித்தனர். அவனும் மீண்டு வந்து நிகழ்ந்தது கூறினன்.

அம்மையாரது அருண்மொழியைக் கேட்ட உடனே இறைவன் அருள் கைகூடுதலால் மருணீக்கியாருக்கு நல்லுணர்வுவந்து தமக் கையாரைச் சார எண்ணம் எழுந்தது. அமண் வேடத்தை அகற்றினர்; வெண்புடவை தரித் தனர்; சூலைநோயைமட்டும் அகற்ற முடிய வில்லையாதலின் அதுதொடர்ந்துவர அம்மை யார் இருக்கும் திருமடம் அடைந்தார். திரு வடியில் விழ்ந்து 'நந் தமது குலம்செய்த நற்றவத்தின் பயனனையீர்! சூலை வாட்டு கின்றது; உய்யும்வழி அருளும்' என்று புலம் பினர். அதனைக்கேட்ட அம்மையார் முன் இறைவன் தமக்கருளிய அருண்மொழிகளை நினைத்தார்; 'பரசமயக்குழியில் விழுந்தீர் துன்புற்றீர் எழுந்திருப்பீர்; இதுவும் இறை வன் திருவருள்; அவனுக்கு ஆட்பட்டுப் பணி செய்வீர்' என்று கூறி, திருநீற்றினைப் பஞ் சாக்ஷரமோதிக்கொடுத்தார்.

அம்மையாரளித்த நீற்றினையே பெரு வாழ்வு வந்ததாகக்கருதி ஏற்றுவாங்கி உடல் முழுதும் அணிந்துகொண்ட மருணீக்கியார், திருவலகும் திருமெழுக்கும் தோண்டியும் கொண்டு வீரட்டானேசுவரர் கோயிலுக்குச்

செல்லும் தமைக்கையாராகிய அம்மையா ருடன் தாமும் சென்ருர்; வலம் வந்தார்; திருமுன்னின்று 'கூற்ருயினவாறு' என்று எடுத்து, 'சூலை சுடுகின்றது; நஞ்சாகிவந்து நலிகின்றது; பறித்துப்புரட்டி அறுத்து ஈர்க் கின்றது; அம்மானே! அஞ்சேல் என்னீர்; முன்அறியாமையினுல் அகன்றேன்; அடைந் தார் வினை தீர்ப்பதன்ருே தலையாயவர் கடன். அலந்தேன்; அலுத்தேன்; தவிர்த்தருளீர்' என்று பலவாருக விண்ணப்பஞ் செய்யும் முறையில் பதிகம் பாடினுர். அருநோய் அகன்றது. இறைவனது கருணைக்கடலில் மூழ்கினுர். அப்பொழுது 'சொற்பொருள் வளம்நிறைந்த பாமாலை பாடியதால் நீ நாவுக் கரசு என்று பெயர்பெறுக' என்னும் அசரீரி வாக்கும் எழுந்தது. மருணீக்கியாராகிய திருநாவுக்கரசரும் அன்றுமுதல் திருப்பணி செய்ய விருப்புடையவராய் சிவச்சின்னங்கள் தரித்துத் தியானமரு உணர்வும், ஈறின்றி எழும் திருவாசகமும், கையிற்றிகழும் உழ வாரமும் கொண்டு தலங்கடோறும் சென்று இறைபணியியற்றி இறுதியாகத் திருப்புகலூ ரில் அண்ணலார் சேவடிக்கீழ் அமர்ந்தனர்.

## முடிவுரை

திலகவதியாரும் தம்பியாருக்கு உண்டான சூலைநோயினை நீக்கிய இறைவன் திருவருளை எண்ணி எண்ணி, பலநாள் கைத்தொண்டு செய்திருந்து இறைவனடி எய்தினர்.

திருநாவுக்கரசு சுவாமிகளை இன்றெல்லாரும் வணங்கவும் அவர்கள் திருப்பாடலை ஓதி இறைவனடி எய்தி இன்புறவும் செய்தவர் திலகவதியம்மையார் என்று கூறுதல் தகும். அம்மையாராகிய குரவரை அரசர் அடையாவிடில் நீறெங்கே? மாமறைநூல்தானெங்கே? எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே? ஒன்றும் இல்லையாம். மற்றும் சைவசமயாசாரியர்கள் திருப்பெயர்களெல்லாம் சிவமூல மந்திரம் போலஐந்தெழுத்துநாமமந்திரங்களாகநின்று மக்களுக்கு அருள்பாலிப்பதுபோல, அம்மையார் திருப்பெயராகிய திலகவதி என்பதும் நாமமந்திரமாக விளங்குதலை அன்பர்கள் அறிந்து போற்றி உய்வார்களாக.

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம். C. 500.